DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 255/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **முத்துராஜா** |
| Father's Name | : | **கிருஷ்ணன்** |
| Village | : | **சித்தலூர்** |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 3,6,7,9 ஆஜர். 1, 2, 4, 5, 8, 10, 11 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4, 5, 8, 10, 11 எதிரிகள் சார்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 28.07.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது சித்தலூாரில் குடியிருந்து வருகிறேன். நான் பி.ஈ படித்து முடித்து விட்டு இருசக்கர மோட்டார் கன்சல்டிங் தொழில் செய்து வருகிறேன். சாட்சிகள் முத்துப்பாண்டி, ராஜாராம் ஆகியோரை எனக்கு தெரியும். வழக்கின் எதிரிகள் அனைவரும் தெரியும் எதிரிகள் அனைவரும் கல்லுப்பட்டியை சேர்ந்தவர்கள். எனது உறவினரான நாகராஜனுக்கும் மதுரை முக்கில் வசிக்கும் ஏலம்மாள் என்வரும் இடையே பெண் கொடுத்து திருமணம் செய்த வகையில் குடும்ப பிரச்சினை இருந்து வந்தது. நாங்கள் நாகராஜனுக்கு சப்போர்ட்டா இருந்ததால் 16.09.2019 ல் எங்களுக்குள் சின்ன அடி தடி பிரச்சினை ஏற்பட்டு அது சம்மந்தமாக சிப்காட் காவல்நிலையத்தில்

எங்கள் மீது வழக்கு பதிவு செய்து எங்களை 10 நாட்கள் நீதிமன்ற காவலில் வைத்திருந்தார்கள்.

2. நாங்கள் வழக்கில் ஜாமீன் பெற்று நிபந்தனையின் படி சிப்காட் காவல்நிலையத்தில் சுமார் 10 நாட்கள் நாங்கள் கையொப்பம் செய்தோம். 01.11.2019 ம் தேதி சிப்காட் காவல்நிலையத்தில் கையொப்பம் போடுவதற்காக நானும், ராஜாரமன், முத்துப்பாண்டி ஆகிய மூவரும் ஒரே பைக்கில் சென்றோம். நான் தான் TN 59 BP 7997 என்ற வண்டியை நான் ஓட்ட ராஜாரமன், முத்துப்பாண்டி ஆகியோர் பின்னால் உட்கார்ந்து வந்துகொண்டிருந்தோம். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு காட்டுரணிக்கும் உருளிக்கும் இடையில் வேலூர் விலக்கிற்கு முன்னால் நாங்கள் போய்க்கொண்டிருந்தபோது பின்னால் வந்த போலிரோ வாகனம் TN 63 BD 4836 என்ற வாகனம் வந்து நாங்கள் சென்ற புல்லட் வாகனத்தின் மீது பின்பக்கம் மோதியது.

3. நாங்கள் நிலை தடுமாறி கீழே விழுந்தபோது அந்த பொலிரோ வாகனத்தில் வந்த சுமார் 10 நபர்களான வழக்கின் எதிரிகள் முத்துப்பாண்டி, பாண்டி, பாலமுருகன், அங்கு விஜயன், செல்லப்பாண்டி, வைரமணி, அழகுசுந்தரம், முத்துச்சாமி, பிரபா, பசுபதி, கருப்பு, ஏலம்மாள், முத்துராணி ஆகியோர் கையில் அருவாள், பட்டா கத்தி, கத்தி ஆகிய ஆயுதங்களுடன் இறங்கி எங்களை விரட்டினார்கள். நாங்கள் ஆளுக்கொரு திசையில் ஓடினோம். எதிரிகள் போலிரோ பிக்கப் வாகனத்திலிருந்து இறங்கி என்னுடன் வந்த ராஜாராமன், முத்துப்பாண்டி ஆகியோரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் நான் புல்லட் பைக்கிலிருந்து கீழே விழுந்ததில் எனக்கு வலது காது ஓரம் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த முத்துப்பாண்டியை எதிரி முத்துப்பாண்டி அருவாளால் வலது கை மணிக்கட்டு மற்றும் இடது மார்பிலும் வெட்டினார்.

4. அதன்பின்னர் ராஜாராமை எதிரிகள் பசுபதி, பாலமுருகன், அங்கு விஜயன் ஆகியோர் அருவாளால் அவரது கால் முட்டி, கால் பாதம், உள்ளங்கை

ஆகிய இடங்களில் வெட்டினார். எங்களை எதிரிகள் வெட்டியதை ரோட்டில் சென்ற ஒரு நபர் பார்த்து சிப்காட் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்து சிப்காட் போலிசாரும் அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள். அதன்பின்பு சிப்காட் போலிசார் ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்சு மூலமாக காயம்பட்ட நாங்கள் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். சிவகங்கை அரசு மருத்துவமனையில் எங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் போதுமான சிகிச்சை இல்லாததால் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் காயம்பட்ட ராஜாராம், முத்துப்பாண்டி ஆகியோர் அனு மதிக்கப்பட்டார்கள். எனக்கு லேசான காயம் என்பதால் நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக நான் சிகிச்சை எடுக்கவில்லை. வெளிநோயாளியாக மட்டும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சம்பவம் நடந்த அன்றே சிப்காட் போலிசார் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு வந்தார்கள். நான் மருத்துவமனையில் வைத்து என்னுடன் வந்த ராஜாராம் மற்றும் முத்துப்பாண்டி ஆகியோர் காயம்பட்டு சிகிச்சையில் இருந்ததால் நான் இந்த வழக்கு சம்மந்தமாக புகார் மனுவினை நான் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் மருத்துவமனையில் வைத்து கொடுத்தது தான். அதிலுள்ள முத்துராஜா என்ற கையொப்பம் என்னுடையது தான். நான் கொடுத்த **புகார் மனு அ.த.சா.ஆ.1** ஆகும். புகார் மனுவில் முத்துப்பாண்டியின் தகப்பனார் கர்ணன் என்பவர் சாட்சிக்காக கையொப்பம் செய்தார். வழக்கு சம்மந்தமாக சிப்காட் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 231(2) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.07.28 11:30:56 +0000

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**